# இந்து சமய அறநிலையத் துறை சார்பில் - சென்னை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள - காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற, கூடுதல் பள்ளிக் கட்டடத் திறப்பு விழாவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பள்ளி மாணவ, மாணவியர் உற்சாகமாக வரவேற்பு அளித்த காட்சிகள் !















அரசு முறைப் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், அமெரிக்காவின் கான்சாஸ் மாகாணத்தில் அமைந்துள்ள கான்செஸ் மாநில வேளாண் பல்கலைக்கழகத்தில் கான்சாஸ் மாகாண வேளாண் துறை செயலாளர், மாகாணத்தின் ஏற்றுமதி இயக்குநர், பல்கலைக்கழகத்தின் வேளாண் துறை பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து பூச்சி நோய் தாக்குதல் மேலாண்மை, வேளாண் பொருட்கள் மதிப்பு கூட்டுதல், செயற்கை நுண்ணறிவு மூலம் பூச்சி மருந்து தெளிக்கும் முறைகள், ஏற்றுமதி வாய்ப்புகள் மற்றும் இங்கு கடைப்பிடிக்கப்படும் சிறந்த நடைமுறைகள் குறித்து கலந்துரையாடினார். உடன் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி. குமரவேல் பாண்டியன், உடன் இருந்தார்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் அரசு உருது மேல்நிலைப்பள்ளியில், கிருஷ்ணகிரி மற்றும் ஓசூர் கல்வி மாவட்டங்களில் உள்ள 16 பள்ளிகளில் ரூ.4 கோடியே 44 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள STEM கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையங்களை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று முன்தினம் (27.06.2025) திறந்து வைத்தார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் ஒசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா, மாநில தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர்.கு.ஆ.நரேஷ், அமெரிக்கன் இந்தியா ஃபவுண்டேசன் டிஜிட்டல் ஈக்வலைசர் திட்ட இயக்குநர் பாஸ்கரன் தீனதயாளன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.